செ.வெ.எண்:03 நாள்:01.10.2019

**வாக்காளர் சரிபார்ப்பு முகாம் மேலும் 15 நாட்களுக்கு(15.10.2019 வரை )நீட்டிக்கப்பட்டுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தகவல்**

இந்திய தேர்தல் ஆணையம், வாக்காளர் பட்டியலின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் தகுதியுள்ள அனைத்து வாக்காளர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்த்தல் என்ற நோக்கத்துடன் 01.09.2019 முதல் வாக்காளர் சரிபார்ப்பு முகாம் (Electbrs Verificatibn programme) என்ற திட்டம் நடைபெற்று வந்தது. இத்திட்டம் மேலும் 15.10.2019 வரையில் நீட்டிக்கப்பட்டு உள்ளது.

இத்திட்டத்தின்படி வாக்காளர்கள் தாங்களாகவே, தங்களது வாக்காளர் பட்டியல் விபரங்களை சரிபார்க்கலாம். இத்திட்டத்தின்படி வாக்காளர்கள் தங்களது மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பெயர், பிறந்த தேதி, வயது, உறவினர் பெயர், உறவினர் வகை, புகைப்படம், பாலினம் விபரங்களை சரிபார்க்கலாம்.

மேலும் இத்திட்டத்தின் போது விடுபட்ட வாக்காளர்கள், எதிர்கால வாக்காளர்கள், இடம் பெயர்ந்த, இறந்த வாக்காளர்களின் விபரங்கள் மற்றும் வாக்குச்சாவடி குறித்த ஆலோசனைகள் சேகரிக்கப்படும். இவ்வாறு வாக்காளர் விபரங்கள் சரிபார்ப்பதற்கு கீழ்க்காணும் ஏதேனும் ஒரு வழிமுறையினை வாக்காளர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

National Voters Service Portal என்ற இணையதளம் மூலமாகவோ, Voter Helpline என்ற கைப்பேசி செயலி மூலமாகவோ,1950 என்ற வாக்காளர் உதவி எண்ணை அழைப்பதன் மூலமாகவோ (அ) வாக்காளர் பதிவு அலுவலர்,வருவாய் கோட்டாட்டாட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்காளர் உதவி மையத்தை அனுகுவதன் மூலமாகவோ (அ) பொது இ-சேவை மையங்கள் மூலமாகவோ (அ) வாக்குச்சாவடி நிலை அலுவலரை நேரடியாக அனுகுவதன் மூலமாகவோ மேற்படி விபரங்களை சரிபார்க்கலாம். இவ்வாறு சரிபார்த்து திருத்தங்கள் ஏதும் மேற்க்கொள்ள வேண்டி இருப்பின் கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு ஆவணத்தை சமர்ப்பித்து மனு அளிக்கலாம்.

இந்திய கடவுச்சீட்டு, ஓட்டுநர் உரிமம், ஆதார் அட்டை, குடும்ப அட்டை, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை, வங்கிக்கணக்கு புத்தகம், உழவர் அடையாள அட்டை, பான் கார்டு, NPR மூலம் வழங்கப்பட்ட மின்னனு அட்டை, சமீபத்திய தண்ணீர்,தொலைபேசி,மின்சாரம்,எரிவாயு இணைப்பு பெற்றதற்கான இரசீது

மேலும், வாக்காளர் சரிபார்ப்பு திட்டத்தின் கீழ் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு, வீடாகச் சென்று வாக்காளர் விவரங்களை சரிபார்க்கவும், தகுதியுள்ள விடுபட்ட வாக்காளர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும் நடவடிக்கை எடுப்பார்கள் அவ்வாறு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் விவரங்களை சரிபார்க்க வரும் போது இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள சான்று ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை வழங்கி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

மேலும், கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்காளர்களும், இத்திட்டத்தினை முழுமையாக பயன்படுத்தி தங்களது மற்றும் தங்களது குடும்ப உறுப்பினர்களின் விபரங்களை சரிபார்த்துக்கொள்ளுமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**